



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.9.2025) தலைமைச் செயலகத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில், மக்கள் கலைஞர் என்றும், தமிழ் சினிமாவின் ஜேம்ஸ் பாண்ட் என்றும் அழைக்கப்பட்ட திரைப்பட நடிகர் ஜெய்சங்கர் அவர்கள் வசித்து வந்த நுங்கம்பாக்கம், கல்லூரி பாதைக்கு "ஜெய்சங்கர் சாலை" என்று பெயர் சூட்டப்பட்டு அதற்கான பெயர் பலகையினை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா. எழிலன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.9.2025) தலைமைச் செயலகத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில், நாடக நடிகர், தமிழ்நாட்டின் முதல் தொலைக்காட்சி தொடர் தயாரிப்பாளர், அரிமா சங்கத்தில் பல முக்கிய பொறுப்புகளை வகித்த எஸ்.வி. வெங்கடராமன் அவர்கள் வசித்து வந்த மந்தைவெளிப்பாக்கம் 5–வது குறுக்கு தெருவிற்கு "எஸ்.வி. வெங்கடராமன் தெரு" என்று பெயர் சூட்டப்பட்டு அதற்கான பெயர் பலகையினை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா. எழிலன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள், எஸ்.வி. சேகர் அவர்களின் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.9.2025) தலைமைச் செயலகத்தில், இயற்கை வளங்கள் துறையின் சார்பில் சென்னை, கிண்டி தொழிற்பேட்டை வளாகத்தில் தரை மற்றும் நான்கு தளங்களுடன் 40,528 சதுர அடி கட்டடப் பரப்பளவில் 23.10 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புவியியல் மற்றும் சுரங்கத்துறையின் தலைமை அலுவலகக் கட்டடத்தை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர் எஸ். ரகுபதி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.9.2025) தலைமைச் செயலகத்தில், பள்ளிக் கல்வித் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் சார்பில் 26 புதிய நூல்களை வெளியிட்டார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை கழக விளையாட்டு மேம்பாட்டு அணி துணைச் செயலாளர் வழக்கறிஞர் பி.கே.பாபு தனது பிறந்த நாளை முன்னிட்டு சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### 'கலைஞர் கனவு இல்லம்' திட்டத்தில் புதிய வீடு கட்ட ஆணை!

# "நான் முதல்வன்" பயனாளி பிரேமாவின் கனவை நனவாக்கிய முதல்வர்!

## சமூக வலைதளத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துப் பதிவு!

சென்னை, செப். 27-

"கல்வியில் சிறந்த தமிழ்நாடு" விழாவில் "நான் முதல்வன்" திட்ட பயனாளி பிரேமாவின் கனவை நனவாக்கிடும் வகையில் 'கலைஞர் கனவு இல்லம்' திட்டத்தின் கீழ் புதிய வீடு கட்ட ஆணை வழங்கியது குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**ஒழுகும் வீட்டில் அப்பா இருப்பாரே என்ற கவலை பிரேமாவுக்கு இனி வேண்டாம்!**

**எத்தனையோ பேரின் எதிர்ப்பையும் மீறி உங்களைப் படிக்க வைத்த தந்தையிடம், முதல் மாதச் சம்பளத்தைத் தந்து நீங்கள் மகிழ்ச்சி அடைந்தீர்கள்!**

**உங்கள் கனவை நிறைவேற்றிய தந்தைக்குக் 'கலைஞர் கனவு இல்லம்' திட்டத்தின்கீழ் புதிய வீடு கட்டிக் கொடுப்பதற்கான ஆணையை வழங்கி நான் மகிழ்ச்சி கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

### மந்தைவெளிப்பாக்கம் 5வது குறுக்குத் தெருவிற்கு 'எஸ்.வி.வெங்கடராமன் தெரு'!

# நுங்கம்பாக்கம் கல்லூரிப் பாதைக்கு 'ஜெய்சங்கர் சாலை' - பெயர் பலகைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி வாயிலாக திறந்து வைத்தார்!

சென்னை, செப். 27-

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.9.2025) தலைமைச் செயலகத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில், மக்கள் கலைஞர் என்றும், தமிழ் சினிமாவின் ஜேம்ஸ் பாண்ட் என்றும் அழைக்கப்பட்ட திரைப்பட நடிகர் ஜெய்சங்கர் அவர்கள் வசித்து வந்த நுங்கம்பாக்கம், கல்லூரி பாதைக்கு "ஜெய்சங்கர் சாலை" என்றும், நாடக நடிகர், தமிழ்நாட்டின் முதல் தொலைக்காட்சி தொடர் தயாரிப்பாளர், அரிமா சங்கத்தில் பல முக்கிய பொறுப்புகளை வகித்த எஸ்.வி. வெங்கடராமன் வசித்து வந்த மந்தைவெளிப்பாக்கம் 5வது குறுக்குத் தெருவிற்கு "எஸ்.வி. வெங்கடராமன் தெரு" என்றும், புதிய பெயர் சூட்டப்பட்ட சாலைகளின் பெயர் பலகைகளை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.**

**ஜெய்சங்கர் சாலை**

மக்கள் கலைஞர் என்றும், தமிழ் சினிமாவின் ஜேம்ஸ் பாண்ட் என்றும் அழைக்கப்பட்ட நடிகர் ஜெய்சங்கர் அவர்கள் 35 ஆண்டு காலத்திற்கு மேலாக தமிழ் சினிமாவில் பிரபல நடிகராக இருந்தார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடன் நெருங்கிய தொடர்புடைய அவர் பல்வேறு தொண்டு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளதோடு, கலைமாமணி விருது பெற்ற பெருமைக்குரியவர் ஆவார். அவரது கலைச்சேவையை சிறப்பிக்கும் வகையில் அவர் வசித்து வந்த நுங்கம்பாக்கத்திலுள்ள கல்லூரி பாதையை (College Lane) "ஜெய்சங்கர் சாலை" என்று பெயர் சூட்டப்பட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நேற்று பெயர் பலகை திறந்து வைக்கப்பட்டது.

**எஸ்.வி. வெங்கடராமன் தெரு**

மயிலாப்பூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.வி. சேகர் தந்தை எஸ்.வி. வெங்கடராமன், விஜயா வாஹினி ஸ்டுடியோவில் லேப் உயரதிகாரியாக பணியாற்றினார். மேடை நாடகங்களில் பெண் வேடமிட்டு நடித்துள்ளதோடு, தமிழ்நாடு திரைப்படக் கல்லூரிகளில் தற்காலிக பேராசிரியாக பணியாற்றியுள்ளார். தமிழ்நாட்டின் முதல் தொலைக்காட்சித் தொடர் "வண்ணக்கோலங்கள்" தயாரிப்பாளர் ஆவார். அரிமா சங்கத்தில் பல முக்கிய பொறுப்புகளை வகித்த அவர் கண்தானம், ரத்த தானம், குழந்தைகளுக்கு ஏற்படும் சர்க்கரை குறைபாடு பற்றி விழிப்புணர்வு குறும்படத்தை தயாரித்ததோடு, தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருதும் பெற்றுள்ளார். அவரது சேவையை சிறப்பிக்கும் வகையில், அவர் வசித்த மந்தைவெளிப்பாக்கம் 5வது குறுக்குத் தெருவிற்கு "எஸ்.வி. வெங்கடராமன் தெரு" என்று பெயர் சூட்டப்பட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் நேற்றைய தினம் பெயர் பலகை திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில், சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் நா. எழிலன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், அரசு உயர் அலுவலர்கள், நடிகர் ஜெய்சங்கர் மற்றும் எஸ்.வி. சேகர் ஆகியோரின் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

காணொலிக் காட்சி வாயிலாக பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர் த. வேலு, துணை மேயர் மு. மகேஷ் குமார், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக் குழு தலைவர் நே.சிற்றரசு, மண்டல குழுத் தலைவர் எஸ். மதன் மோகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# வாக்குச்சாவடி முகவர்கள் தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டம் !

## மாவட்ட கழக பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. அறிக்கை!



செஞ்சி செப் 27-

விழுப்புரம் வடக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

விழுப்புரம் மண்டல பொறுப்பாளரும் உழவர் நலன் மற்றும் வேளாண்மை துறை அமைச்சர் எம். ஆர். கே. பன்னீர்செல்வம் வழிகாட்டுதலின்படி விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் வாக்குச்சாவடி முகவர்கள் பி.எல்.ஏ.2. மற்றும் தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் இன்று (27.9.2025-சனிக்கிழமை) காலை 10 மணிக்கு செஞ்சி திருவண்ணாமலை சாலையில் உள்ள தமிழ் திருமகள் திருமண மண்டபத்தில் செஞ்சி, அனந்தபுரம் பேரூர், ஒருங்கிணைந்த செஞ்சி ஒன்றியத்திற்கும்,பகல் 12.00 மணிக்கு மேல்மலையனூர் சிவன் அருள் திருமண மண்டபத்தில் ஒருங்கிணைந்த மேல்மலையனூர் ஒன்றியத்திற்கும். மாலை 4.00 மணிக்கு நாட்டார்மங்கலம் கே.எஸ்.எம். திருமண மண்டபத்தில் ஒருங்கிணைந்த வல்லம் ஒன்றியத்திற்குஉட்பட்ட வாக்குச்சாவடி முகவர்கள் பி எல் ஏ 2 மற்றும் தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் எனது (முன்னாள் அமைச்சர், விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ.) தலைமையில் நடைபெறுகிறது.

கூட்டத்தில்அந்தந்த பகுதிக்கு உட்பட்ட மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள்,வாக்கு சாவடி முகவர்கள், BLA2, தேர்தல் பணி குழு ஒருங்கிணைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட கழக பொறுப்பாளர், செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### ரூ.39.33 கோடியில் 145 நூலகக் கட்டிடங்கள் திறப்பு! ரூ.4.01 கோடியில் மாவட்ட மைய நூலகக் கட்டட அடிக்கல்!

# தமிழ்நாடு பாடநூல் கல்வியியல் பணிகள் கழகத்தின் 26 புதிய நூல்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

சென்னை, செப். 27-

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.9.2025) தலைமைச் செயலகத்தில், பள்ளிக் கல்வித் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் சார்பில் 26 புதிய நூல்களை வெளியிட்டார். மேலும், பொது நூலக இயக்ககத்தின் சார்பில் 39 கோடியே 33 இலட்சம் ரூபாய் செலவிலான 146 நூலகக் கட்டடங்களை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்து, கள்ளக்குறிச்சி நகரில் 4 கோடியே 1 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள மாவட்ட மைய நூலகக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார்.**

**26 புதிய நூல்களை வெளியிடுதல்**

தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தின் நாட்டுடைமை நூல்கள், நூற்றாண்டு காணும் ஆளுமைகள், முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டம், இளந்தளிர் இலக்கியத் திட்டம், செவ்வியல் நூல்கள், அரிய நூல்கள் வெளியீடு ஆகிய திட்டங்களின் கீழ் நூல்கள் வெளியிடப்பட்டு வருகிறது.

அந்த வகையில், அரிய நூல்கள் பிரிவில் - "தமிழ்நாட்டில் காந்தி" எனும் நூலும், நாட்டுடைமை நூல்கள் பிரிவில் "தமிழர் தலைவர்" (தந்தை பெரியார்), தமிழில் சிறுபத்திரிகைகள், பாரதி நினைவுகள், பாரதியார் சரித்திரம், என் குருநாதர் பாரதியார், நான் கண்ட பெரியவர்கள் ஆகிய நூல்களும், மூத்த வரலாற்று அறிஞர்களின் தமிழ்நாட்டு வரலாறு அரிய நூல்கள் பிரிவில் - பல்லவர் வரலாறு மற்றும் மொகஞ்சதரோ அல்லது சிந்துச் சமவெளி நாகரீகம் ஆகிய நூல்களும், நூற்றாண்டு காணும் ஆளுமைகள் பிரிவில் டி.கே. சீனிவாசன் படைப்புலகம் என்ற நூலும், முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டத்தின் கீழ் குறட்டை மற்றும் தூக்கத்தில் மூச்சுத்தடை - ஒரு கண்ணோட்டம், மருத்துவ ஆராய்ச்சி முறைகளும் ஆய்வறிக்கை எழுத எளிய வழிமுறையும், Robert Frost Poems in Tamil, Ramayyan Ammanai (A Tamil Historical ballad) ஆகிய நூல்களும், இளந்தளிர் இலக்கியத் திட்டத்தின் கீழ் ஆதியும் நடேசன் தாத்தாவும், இரட்டை முனை வாள், எழிலனின் ஆசை, சாதனை, பாட்டிக்கு என்ன பரிசு தர வேண்டும், பூத்த சிறகுகள், அவள் ஒரு தேவதை, கண்டுபிடி கண்டுபிடி, காதல், முகிலைத் தேடி ஆகிய நூல்களும், செவ்வியல் நூல்கள் பிரிவில் பரிபாடல் என்ற நூலும், என மொத்தம் 26 புதிய நூல்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று வெளியிட்டார்.

**பொது நூலக இயக்ககம்**

தமிழ்நாட்டில் உள்ள பொது நூலகங்கள் மாநிலம் முழுவதும் கல்வி, எழுத்தறிவு மற்றும் அறிவுப் பரவலை வளர்ப்பதில் முக்கிய பங்கு வகிப்பதோடு, பெரும் எண்ணிக்கையிலான நூல்கள், பருவ இதழ்கள் மற்றும் மின் வளங்களைக் கொண்டு அனைத்து வயதினரும் வாழ்நாள் முழுவதும் கற்றலுக்கான அணுகக் கூடிய மையங்களாக விளங்குகின்றன. இந்த நூலகங்கள் நகர்ப்புற மற்றும் கிராமப்புற சமூகங்களில் கல்வி மற்றும் தொழில்முறை திறன் மேம்பாட்டை ஊக்குவிக்கின்றன. சென்னை- கன்னிமாரா பொது நூலகம், சென்னை- அண்ணா நூற்றாண்டு நூலகம், மதுரை - கலைஞர் நூற்றாண்டு நூலகம், மாவட்ட மைய நூலகங்கள், கிளை நூலகங்கள், ஊர்ப்புற நூலகங்கள், நடமாடும் நூலகங்கள், பகுதிநேர நூலகங்கள், என 4,682 நூலகங்களை பொது நூலக இயக்குநரகம் நிர்வகிக்கிறது.

**திறந்து வைக்கப்பட்ட புதிய நூலகக் கட்டடங்களின் விவரங்கள்**

தமிழ்நாடு அரசின் 2024-25ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், குழந்தைகள், வளர் இளம் பருவத்தினர் மற்றும் இளைஞர்களை ஈர்க்கும் வகையில் பொது நூலகங்களில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட 213 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, பொது நூலக இயக்ககத்தின் கீழ் செயல்படும் நூலகங்களுக்கு 2023-2024-ஆம் ஆண்டில் மாநிலங்களுக்கு மூலதன முதலீட்டிற்கான சிறப்பு உதவித் திட்டம் பகுதி VII இன் கீழ், 821 பொது நூலகங்களுக்கு கூடுதல் கட்டடம் கட்டுதல்/தேவையான மேஜைகள், நாற்காலிகள் போன்ற தளவாடங்கள், கணினி தொடர்புடைய சாதனங்கள் மற்றும் புத்தகங்கள் வாங்குதல் போன்றவற்றிற்கு சிறப்பு நிதியுதவியாக 213 கோடியே 46 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது. இதில் ஒரு நூலகக் கட்டடம் 500 சதுர அடி பரப்பளவில் 821 பொது நூலக ங்களுக்கு உள்ளாட்சி அமைப்புகள் வழியாக புதிய கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.

தற்பொழுது ஊரக வளர்ச்சித் துறையின் மூலம் 90 நூலகங்களும், பேரூராட்சிகள் இயக்ககம் மூலம் 32 நூலகங்களும், நகராட்சி நிர்வாகத் துறை (நகராட்சி) மூலம் 20 நூலகங்களும், என அனைத்து மாவட்டங்களிலும் மொத்தம் 31 கோடியே 24 இலட்சம் ரூபாய் செலவிலான நூலகக் கட்டடங்கள், 2 கோடியே 84 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நூல்கள், 2 கோடியே 05 இலட்சம் ரூபாய் மதிப்பிலான மேஜைகள், நாற்காலிகள் போன்ற தளவாடங்கள், 78 இலட்சம் ரூபாய் மதிப்பிலான கணினி தொடர்புடைய சாதனங்கள், என மொத்தம் 36 கோடியே 92 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 142 நூலகக் கட்டடங்கள்;

கோயம்புத்தூர் மாவட்டம், பெரியநாயக்கன்பாளையத்தில் 50 இலட்சம் ரூபாய் செலவில் 1069 சதுரடியில் முழுநேர கிளை நூலகம், ஈரோடு மாவட்டம், கோபிசெட்டி பாளையம்-2ல் 50 இலட்சம் ரூபாய் செலவில் 1590 சதுரடியில் முழுநேர கிளை நூலகம், ஆலாம்பாளையத்தில் 50 இலட்சம் ரூபாய் செலவில் 1484 சதுரடியில் கிளை நூலகம், அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டத்தில் 91 இலட்சம் ரூபாய் செலவில் தரை மற்றும் முதல்தளத்துடன் 1883 சதுரடியில் கட்டப்பட்டுள்ள முழுநேர கிளை நூலகம்; என மொத்தம் 39 கோடியே 33 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 146 நூலகக் கட்டடங்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார்.

**கள்ளக்குறிச்சி புதிய மாவட்ட மைய நூலகத்திற்கு அடிக்கல் நாட்டுதல்**

கள்ளக்குறிச்சி நகரில் மாவட்ட மைய நூலகம் நான்கு தளங்களுடன் 14,369 சதுரடியில் 4 கோடியே 1 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டுவதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சியில், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக்கல்வித்துறை முதன்மைச் செயலாளர் மருத்துவர் பிசந்தரமோகன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத் தலைவர் திண்டுக்கல் ஐ. லியோனி, பொது நூலக இயக்குநர் (மு.கூ.பொ) திருமதி ச. ஜெயந்தி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் (பொ) மருத்துவர் மா. ஆர்த்தி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக உறுப்பினர்-செயலர் முனைவர் சி. உஷாராணி, பொது நூலக இணை இயக்குநர் ச. இளங்கோசந்திரகுமார் மற்றும் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக உதவி இயக்குநர் முனைவர் ப.சரவணன் ஆகியோர் கலந்துகொண்டனர்.